# விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)

**(சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது)**

**பல்கலைக்கழக மானியக் குழுவால் 2(f) 12(B) தகுதி பெற்றது**

**வீராச்சிப்பாளையம், சங்ககிரி மேற்கு, சேலம் 637 303.**

## தமிழ்த்துறை

## CO-CURRICULAR ACHIEVEMENTS

### EXTRA CURRICULAR ACTIVITIES

**பன்னாட்டுக் கருத்தரங்கம்:**

‘**தமிழ் இலக்கியங்களில் தமிழர் மாண்புகள்**’ என்ற பொருண்மையில் 29.02.20 அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கத்தோடு இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் **122 ஆய்வாளர்களின் கட்டுரைகள் இரண்டு தொகுதிகளாக நூலாக்கம்** செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இதில் கத்தார் நாட்டிலிருந்தும் அந்தமான் தீவிலிருந்தும் பல ஆய்வுக்கட்டுரைகள் வந்தமை சிறப்பிற்குரியது. மேலும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறையோடு ‘புரிந்துணர்வு ஒப்பந்தம்’ (MOU) செய்யப்பட்டுள்ளது. இதன் துறைத்தலைவர், **முனைவர் சி.தியாகராஜன்** அவர்களும் தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இணைப்பேராசிரியர், **முனைவர் ஆ.விஜயராணி அவர்களும், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் முனைவர் ந.இராஜேந்திரன்** அவர்களும் **“தமிழ் இலக்கியங்களில் தமிழர் மாண்புகள்”** குறித்த கருத்தரங்க உரை நிகழ்த்தினார்கள்.



**பன்னாட்டுக் கருத்தரங்கம்**




**புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)**

**சிறப்புச் சொற்பொழிவு:**

1. **‘பெரியபுராணத்தில் மகளிர் மாண்புகள்’** என்ற தலைப்பில் 18.09.19 அன்று சிவத்திரு அ.வேலுச்சாமி அவர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.
2. **‘தேவாரம் முற்றோதல்’** என்ற இன்னிசையோடு தேவாரப்பாடல்கள் படுதல் 18.09.19 அன்று திரு.பெ.ஈஸ்வரன் அவர்களைக் கொண்டு ஊக்கச் சொற்பொழிவு நடைபெற்றது.
3. **‘வாழ்க்கை வெல்வதற்கே’** என்ற தலைப்பில் 29.01.20 அன்று கோ.உப்பிலி ஸ்ரீனிவாசன் அவர்களைக் கொண்டு ஊக்கச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.






**சிறப்புச் சொற்பொழிவு**

**பயிலரங்கம் :**

1. **‘இணையத்தமிழ்’** என்ற தலைப்பில் 26.07.2019 அன்று கோவை, **ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் த.சத்தியராஜ்** அவர்களைக் கொண்டு பயிலரங்கம் நடத்தப்பட்டது.
4. **‘யாப்பிலக்கணம்’** என்ற தலைப்பில் 25.09.19 அன்று **திருவையாறு அரசர் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ச.திருஞானசம்பந்தம்** அவர்களைக் கொண்டு பயிலரங்கம் நடத்தப்பட்டது.







**பயிலரங்கம்**

## CO CURRICULAR ACTIVITIES

### வெள்ளிவட்டம் நிகழ்வு

வெள்ளிவட்டத்தின் மூலம் **ஆய்வுக்கட்டுரை வாசித்தல், பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம், நாட்டுப்புறப் பாடல், இசையரங்கம், மேடைப்பேச்சு, விவாத மேடை, நூல்விமர்சனம், கிராமிய நடனம், மென்பொருள் காட்சி (PPT), வினாடி வினா, பண்டைய விளையாட்டுக்கள், மௌன நாடகம், மற்றும் சமூக பதிவுகள்** முதலிய களங்களில் மாணவிகள் பங்கெடுத்து தங்களது தனித்திறனை வெளிப்படுத்தினர்.






### முத்தமிழ் மன்ற நிகழ்வு :

10.07.19 அன்று முத்தமிழ் மன்றத் தொடக்கவிழா துவங்கப்பட்டது. 27.08.19 அன்றும் 28.09.19 அன்றும் முத்தமிழ் கூடல்கள் நடைபெற்றன. இதில் நம் கல்லூரியின் அனைத்துத் துறை மாணவிகளும் இயல் இசை நாடகம் சார்ந்து **பேச்சு, கவிதை, கட்டுரை, நடனம், பாட்டு, நாடகம், ஓவியம், சிறுகதை,** உள்ளிட்ட பல நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

11.02.20 மற்றும் 12.02.20 ஆகிய இருதினங்களில் **நமது கல்லூரி மாணவிகளுக்கும் பிற கல்லூரி மாணவிகளுக்கும் முத்தமிழ் போட்டிகள்** நடைபெற்றன. இதில் பிறகல்லூரி மாணவிகள் உட்பட **322 பேர் பங்கேற்றனர்.**




முத்தமிழ் மன்றத் துவக்கவிழா




முத்தமிழ் மன்றப் போட்டிகள்

**ஆண்டாள் திருக்கல்யாண வைபவம்**

13.01.2020 அன்று **ஆண்டாள், அரங்கனாதர் திருக்கல்யாண வைபவ** நிகழ்வானது அனைத்துத்துறை மாணவிகளையும் கொண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.






**தமிழ் மரபுக் கண்காட்சி**

27.09.19 அன்று தமிழ் மரபுக் கண்காட்சி நடைபெற்றது. இதில் இடம்பெற்ற காட்சிப்பொருட்களாக,

1. பண்டையத் தமிழரின் இசைக்கருவிகள்
2. பழந்தமிழரின் விளையாட்டுகள்
3. மழைநீர் சேகரிப்பும் நீர் மேலாண்மையும்
4. சங்கநூல் காட்சிகள்
5. தமிழரின் மருத்துவ மூலிகைகள்
6. கணக்கதிகாரம் குறிப்பிடும் பலாச்சுளையின் கணக்கீடு
7. பன்னாட்டு நாணயங்களும் அதன் மதிப்புகளும்
8. பாரம்பரிய தானியங்களின் வகைகள் மற்றும் பயன்கள்
9. கீழடி அகழாய்வுப் பொருட்கள்
10. தமிழரின் போர்கருவிகள் எனக் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் 40 மாணவிகள் தங்களின் பங்களிப்பினைத் தந்துள்ளனர்.



**இன்பச்சுற்றுலா:**

மாணவிகளின் உள்ளங்களை மகிழ்வூட்டும் வகையில் 10.10.19 அன்று கோவை, பிளாக் தண்டருக்குச் சென்றுவந்தனர்.




**கல்விச்சுற்றுலா:**

தமிழ்த்துறை மாணவிகள் சென்ற கல்விச்சுற்றுலா விவரம் வறுமாறு:

1. ஈஸ்வரன் கோவில், கொடுமுடி, சேலம். 31.07.19
2. ஆஞ்சநேயர் கோவில், நாமக்கல், 23.10.19
3. குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, சேலம், 07.02.20




**விரிவாக்கப்பணி: (EXTENSION ACTIVITY):**

04.09.19 அன்று தேவூர், மனநிலைக் காப்பகத்திற்குச் சென்று மாணவிகள் தங்களால் இயன்ற பொருட்களை அக்காப்பகத்திற்கு வழங்கி உதவியதோடு அவர்களை மகிழ்விக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்தி வந்தனர்.



**குடியரசுதின விழாவிழா:**

25.01.20 அன்று சேலம், திரு.தலைவாசல் இலட்சுமணன் அவர்களின் குழுவினைக்கொண்டு **‘நாம் பெற்ற சுதந்திரம் வளர்பிறையாக இருக்கின்றதா? தேய்பிறையாக இருக்கின்றதா?** என்ற தலைப்பில் இன்னிசைப் பாட்டுப் பட்டிமன்றம் நிகழ்த்தப்பட்டது.

**ஆசிரியர்தின விழா :**

05.09.19 அன்று ஆசிரியர்தின விழாவினை முன்னிட்டுக் கவிதை வாசித்தல், பேச்சுப்போட்டி, நாடகப்போட்டி, பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

**சான்றிதழ் கல்வி**

07.01.2020 அன்று தமிழ்த்துறையில் **“நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள்”** என்ற சான்றிதழ் பாட வகுப்பு தொடங்கப்பட்டது. இவ்வகுப்பினை **அ.சத்யராஜ் அவர்கள் கலை ஒருங்கிணைப்பாளர், அன்னை கலைக் குழுமம், கும்பகோணம். அ.மாதவன், கலையாசிரியர், திருவாரூர் மாவட்டம். த.ஏஜ்சலின், கலைத் துணையாசிரியர், கடலூர். ப.ஆர்த்தி, கலைத் துணையாசிரியர், அரியலூர். ம.அருணா, கலைத் துணையாசிரியர், திருநெல்வேலி** ஆகியோர் பயிற்றுவிக்கின்றனர்.



கரகாட்டம்



கோலாட்டம்

**மாணவிகளின் தனித்திறன் :**

## ACHIEVEMENTS

1. 13.10.19 அன்று ஈரோடு அரிமா சங்கத்தின் சார்பில் நடத்தப்பெற்ற மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் முதுகலை மாணவி து.திவ்யா பங்கேற்றார்.
2. குமாரபாளையம், **ஜே.கே.கே.என்** கல்லூரியில் நடைபெற்ற ஒருநாள் தேசியக் கருத்தரங்கில் 5 முதுகலை மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.
3. **கோவை என்.ஜி.பி** கல்லூரியில் நடைபெற்ற இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கில் மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.
4. ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஒருநாள் பயிலரங்கில் பங்கேற்றுள்ளனர்.
5. 27.09.19 அன்று நம் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மரபுக் கண்காட்சியில் 39 மாணவிகள் அறிவியல் தமிழ் சார்ந்து **10 தலைப்புகளில்** பொருட்களைக் காட்சிப்படுத்தினர்.
6. 25.01.20 அன்று நம்கல்லூரியில் நடைபெற்ற **'நாம் பெற்ற சுதந்திரம் வளர்பிறையாக இருக்கின்றதா? தேய்பிறையாக இருக்கின்றதா?** என்ற தலைப்பிலான இன்னிசைப் பாட்டுப் பட்டிமன்றத்தில் முதுகலை மாணவி து.திவ்யா பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி பாலிமர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.
7. எக்ஸல் கல்லூரியில் நடைபெற்ற **பேச்சுத்திருவிழா** நிகழ்ச்சியில் தமிழ்த்துறை **முதுகலை மாணவி து.திவ்யா** பங்கேற்றுப் பேசினார். **இந்நிகழ்ச்சி 10.02.2020 அன்று கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.**
8. சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முதுகலை மாணவி லோ.ஐஸ்வர்யா அவர்கள் **'சங்க இலக்கியப் பறவைகளும் விலங்குகளும்'** என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார்.
9. நமது கல்லூரியில் நடைபெற்ற **'தமிழ் இலக்கியங்களில் தமிழர் மாண்புகள்'** என்ற கருத்தரங்கில் தமிழ்த்துறை மாணவிகள் **32 பேர் ஆய்வுக்கட்டுரையை** வழங்கியுள்ளனர்.
10. 25.01.20 அன்று நடைபெற்ற குடியரசுதின விழாவில் பல்வேறு துறையைச் சார்ந்த மாணவிகள் **கட்டுரை, பேச்சு, ஓவியம் ஆகிய போட்டிகளில் 128 மாணவிகள் பங்கேற்றனர். இதில் 9 மாணவிகள் முதல் மூன்று இடங்களில் பரிசினைப்** பெற்றனர்.
11. **தேசிய வாக்காளர் தினம் 2020** சார்பில் நடைபெற்ற ஓவியப்போட்டியில் 6 மாணவிகள் பங்கேற்றனர்.
12. ஆண்டுதோறும் தமிழ்த்துறையில் வெளியாகும் **பெண் மை** என்ற இதழில் அனைத்துறையிலுள்ள மாணவிகளது படைப்புகளைக் கொண்டு **பெண் மை** இதழ் வெளியிடப்பட்டது.

**13.** 10.10.19 அன்று விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, திருச்செங்கோடு, **தமிழ்த்துறையில் நடைபெற்ற விக்கிபீடியா பயிலரங்கிலும் மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.**